# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 310/மா/2023**

**நாள்: 30.11.2023**

திரு. த. விக்னேஸ்வரன்,
திருச்சிராப்பள்ளி . – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டுகுழு அலுவலகம் -2,
அரியமங்கலம் மண்டலம்.
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிராப்பட்டி, அருணாச்சல நகர் 5வது தெரு, 71 என்ற முகவரியில் வசிக்கும் திரு. த. விக்னேஸ்வரன் என்பவரின் 8.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2023–ல் பெறப்பட்டு 310/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிராப்பட்டி, அருணாச்சல நகர், 5வது தெரு, 71 என்ற முகவரியில் வசிக்கும் திரு. த. விக்னேஸ்வரன் என்பவரின் 8.10.2023 நாளிட்ட மனுவில்:-

"திருச்சி மாநகராட்சி Zone-2, வார்டு 20க்குட்பட்ட பகுதியில் மாநகராட்சி கட்டிட அனுமதியின் கீழ் புதிதாக இரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

அவை 1) வார்டு குழு 2 வார்டு எண்.20-ல் வலையல்கார தெருவில் புதிய சர்வே எண்.115-ண் திட்ட அனுமதி எண்.1441/2022 மற்றும் கட்டிட அனுமதி எண்.154/2023.

2) வார்டு குழு 2 வார்டு எண்.20-ல் நடுகல்லுக்கார தெருவில் சர்வே எண்.-113ல் திட்ட அனுமதி எண்.01394/2021 மற்றும் கட்டிட அனுமதி எண்.136/2021.

மேற்கண்ட கட்டிடங்களில் கட்டிட விதிகளை மீறியும் மாநகராட்சியால் பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக அளவுகளை அதிகரித்தும், பெறப்பட்ட அனுமதிக்கு அதிகமாக கட்டிட தளங்களையும் கட்டி வருகின்றனர். கட்டிட அனுமதிக்கு பின்பு கொடுக்கப்பட்ட அனுமதிக்கு உட்பட்டு கட்டிடம் கட்டப்படுகிறதா ? நிபந்தனைகளை கட்டிட உரிமையாளர்கள் பின்பற்றி கட்டிடம் கட்டுகிறார்களா ? அனுமதிக்கு மீறியும், மாறுதலாகவும் கட்டிடம் கட்டப்படுகிறதா என்பதை சம்பந்தப்பட்ட மாநகராட்சி வார்டு அலுவலர், இளநிலை பொறியாளர் (JE) மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் குறிப்பிட்ட கால இடைவெளியில் கள ஆய்வு செய்ய வேண்டும். ஆனால் Zone -2ல் உள்ள இளநிலை பொறியாளர் (JE) மற்றும் அரியமங்கல கோட்ட உதவி

ஆணையர் ஆகியோர் எந்தவிதமான கள ஆய்வும் செய்வதில்லை. அனுமதிக்கு மீறியும் விதி மீறியும் கட்டப்படும் கட்டிடம் தொடர்பாகவும் கண்ணுக்கும் தெரிந்தும் அதுபற்றி கண்டுகொள்வதுமில்லை. இம்முறைகேடுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு கட்டிடகாரர்களால் ஆதாயம் பெற்றுக்கொள்வதாக தெரிகிறது. இச்செயல் என்பது ஒரு அரசு ஊழியர் தனக்கான பணியை, கடமையை செய்ய தவறுகிறார் என்பதை காட்டுகிறது. இது தொடர்பாக நான் 1.8.2023 அன்று சம்பந்தப்பட்ட வார்டு அலுவலரிடம் புகைப்படத்துடன் வாட்சாப் மூலம் தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்க கூறி கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் சம்பந்தப்பட்ட அலுவலர் சுமார் 1 மாதம் வரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த நிலையில் நான் கடந்த 05.09.2023 அன்று தமிழக முதல்வர் தனிபிரிவிற்கு அனுமதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீதும் கடமையை செய்ய தவறிய அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக்கூறியும் புகார் செய்தேன்.

இப்புகார்கள் மீது 2-வார்டு குழு உதவி ஆணையர் அவர்கள் முன்னுக்கு பின் முரணான தகவலை பதிலாக கொடுத்துள்ளார்.

அனுமதிக்கு மாறாகவும், விதிமுறைகள் மீறி கட்டப்பட்டு வரும் கட்டிடங்கள் மற்றும் உரிமையாளர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 283 மற்றும் 296ன்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விதிமீறி கட்டப்படும் கட்டிடம் மீது சரியான விரைவான நடவடிக்கை எடுக்காமல் கட்டிடதாரர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட மேற்கண்ட இளநிலை பொறியாளர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் மீது துறை ரீதியான கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும் திருச்சி மாநகராட்சி முழுவதும் உள்ள வார்டுகளில் குறைந்தபட்சம் கடந்த 5 ஆண்டுகளில் மாநகராட்சியால் கொடுக்கப்பட்ட கட்டிட அனுமதிகளில் எத்தனை கட்டிடங்கள் விதிமுறை மற்றும் நிபந்தனைகளை மீறி கட்டப்பட்டுள்ளது என்பதை மாநகராட்சி ஆணையர் துரிதமாக நேரடி கள ஆய்வு செய்ய வேண்டும் என்றும், இம்முறைகேடுகளை கண்டும் காணாமல் இருந்த அனைத்து அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உரிய உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**3. இம்முறைமன்ற கடித நாள் 17.10.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 14.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரர் குறிப்பிட்ட (1) கட்டிடம் வார்டு எண்.20ல் வளையல்காரத் தெருவில் பழைய சர்வே எண்.704, புதிய சர்வே எண்.115ல் உள்ள, திட்ட அனுமதி எண்.1441/2022 மற்றும் கட்டட அனுமதி எண்.154/2022 நாள்:10.10.2022ல், கட்டிடத்திற்கு திட்ட மற்றும் கட்டிட அனுமதி பெற்றுள்ளார்கள். மேலும், கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம், 296 (1&2) 282 (1&2) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக ஆணை முதல் அறிவிப்பு நாள்:24.03.2023ல் வழங்கப்பட்டது. மேலும் மாநகராட்சி சட்டம் 296 (3) பிரிவுகளின் கீழ் உறுதி செய்யப்பட்ட ஆணை என்றும், இறுதி அறிவிப்பு நாள்:25.04.2023ல் வழங்கப்பட்டது. மேலும், குற்றத்தாள் தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

2. மேலும், வார்டு எண்.20ல் நடுக்கல்லுக்காரத் தெருவில் நகரளவு எண்.113ல் உள்ள, திட்ட அனுமதி எண்.01394/2021 மற்றும் கட்டட அனுமதி எண்.136/2021 நாள்:10.09.2022ல், கட்டிடத்திற்கு திட்ட மற்றும் கட்டிட அனுமதி பெற்றுள்ளார்கள். மேலும், கட்டட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 1998ம் வருடத்தில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு நாள்:10.07.2023ல் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட சட்டம் 35/2022 135/6 பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் இறுதி அறிவிப்பு நாள்:03.08.2023ல் இரண்டாம் முறை

வழங்கப்பட்டது. குற்றத்தாள் தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மனுதாரர் முறையீட்டு மனுவில் தெரிவித்த வார்டு-20க்குட்பட்ட வளையல்காரத் தெரு மற்றும் நடுக் கல்லுக்காரத் தெருவில் கட்டிடப்பணி நடைபெற்று வரும் கட்டிடத்தின் கட்டிட உரிமையாளருக்கு மாநகராட்சி கட்டிட விதிகளின்படி நோட்டீஸ் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 6.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 15.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், வார்டு எண் 20க்கு உட்பட்ட பகுதியில் வளையல்கார தெரு சர்வே எண் 115 மற்றும் நடுகல்லுக்கார தெரு சர்வே எண் 113 ஆகிய இடங்களில் இரண்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட வணிக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டட விதிகளை மீறியும் மாநகராட்சியால் பெறப்பட்ட அனுமதிக்கு மாறாகவும் கட்டியுள்ளனர். இது தொடர்பாக மாநகராட்சியில் புகார் மனு அளித்தும் மாநகராட்சி அதிகாரிகளால் எவ்வித கள ஆய்வும் மேற்கொள்ளாமல் கண்டும் காணாமலும் உள்ளனர். எனவே, அனுமதிக்கு மாறாகவும் விதிமுறைகளை மீறியும் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடங்கள் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் தக்க நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறும், விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 8.10.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்றும் தெரிவித்துள்ளார்.

**4. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் 15.11.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"திருச்சிராப்பள்ளி மாவட்டம் வார்டு எண் 20க்கு உட்பட்ட பகுதி வளையல்கார தெரு பழைய சர்வே எண்.704 புதிய சர்வே எண்.115–ல் கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு 10.10.2022ல் கட்டட அனுமதி பெற்றுள்ளனர். கட்டட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 296(1&2), 282 (1&2) பிரிவின் கீழ் தற்காலிக ஆணை 24.03.2023 அன்றும், மாநகராட்சி சட்டம் 296(3) பிரிவின் கீழ் இறுதி அறிவிப்பு 25.04.2023 அன்றும் தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று நடுகல்லுக்கார தெரு சர்வே எண்.113–ல் கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு 10.9.2022ல் கட்டட அனுமதி பெற்றுள்ளனர். அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1ன் கீழ் முதல் அறிவிப்பு 10.07.2023 அன்றும் இறுதி அறிவிப்பு 135/6 பிரிவின் கீழ் 03.08.2023 அன்றும் தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் 14.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக

எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளனர்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் திருச்சிராப்பள்ளி மண்டலம்-2, வார்டு 20க்கு உட்பட்ட பகுதியில் வளையல்கார தெருவில் புதிய சர்வே எண்.115ல் கட்டப்பட்ட கட்டடத்திற்கு திட்ட அனுமதி எண்.1441/2002 மற்றும் கட்டிட அனுமதி எண்.154/2023 மற்றும் நடுகல்லுக்கார தெருவில் சர்வே எண்.113ல் கட்டப்பட்ட கட்டடத்திற்கு திட்ட அனுமதி எண்.01394/2021 மற்றும் கட்டிட அனுமதி எண்.136/2021 அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு கட்டடங்களும் விதிமீறியும் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளது. இது குறித்து திருச்சிராப்பள்ளி மண்டலம்-2ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே தன் மனு மீது உரிய விசாரணை நடத்தி விதிமீறி கட்டப்பட்ட கட்டடங்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறும், விதிமீறி கட்டப்பட்ட கட்டடங்கள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட வளையல்கார தெரு, பழைய சர்வே எண்.704, புதிய சர்வே எண். 115–ல் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டட உரிமையாளருக்கு 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம், 296 (1 & 2) 282 (1 & 2) பிரிவுகளின் கீழ் 24.3.2023 அன்று தற்காலிக முதல் அறிவிப்பு ஆணை வழங்கப்பட்டது என்றும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 296 (3) பிரிவின் கீழ் 25.4.2023 அன்று இறுதி ஆணை வழங்கப்பட்டது என்றும் குற்றத்தாள் தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும், மற்றும் நடுக்கல்லுக்காரத் தெரு, ச.வே எண்.136/2021ல் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் 10.7.2023 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் மற்றும் பிரிவு 135/6 பிரிவின் கீழ் 3.8.2023 அன்று இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், குற்றத்தாள் தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் அறிக்கையிலும், இளநிலைப் பொறியாளர் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட இரண்டு விதிமீறல் கட்டடங்களுக்கு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்திருந்தாலும் Tamil Nadu Town and Country Plan Act 1971ல் அளிக்கப்பட்டுள்ள கால அவகாசத்தை பின்பற்றி தொடர் நடவடிக்கை எடுக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலர்கள் தவறிவிட்டனர் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-2ன் இந்த மெத்தன செயல் ஏற்கத்தக்கதல்ல. இவ்வாறான விதிமீறி கட்டப்படும் கட்டடங்கள் குறித்து உதவி ஆணையர் தனிகவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு: 12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x-x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.20, வளையல்கார தெரு ச.வே எண்.115 மற்றும் நடுகல்லுக்கார தெரு சர்வே எண்.113–ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட இரண்டு கட்டடங்களை ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்து சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க தவறிய திருச்சிராப்பள்ளி மண்டலம்-2ன் சம்பந்தப்பட்ட அலுவர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அறிக்கை அளிக்கும்படி திருச்சிராப்பள்ளி மாநகாட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறான அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டடங்களை ஆரம்ப நிலையிலேயே களஆய்வு செய்யுமாறு உதவி ஆணையாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பும்படி திருச்சிராப்பள்ளி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இந்நேர்வு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

The field officials concerned in the allegation are squarely responsible for this kind of buildings constructed in sheer violation of Town and Country Planning Act and Rules. Instead of issuing consecutive notices as stipulated in the Town and Country Planning Act, the violators are being protected, safeguarded with favouritism in filing a case before the Court for levying a fine. Does payment of the penalty absolve the violator of the offence of violation of Town and Country Planning Rules and Building Plan approval conditions? This betrays the official stark connivance, collusion, complicity and deliberate abetment of the violations. The Corporation Commissioner Trichy is directed to ensure adherence to the implementation of Town and Country Planning Act in its true spirit by initiating and expediting immediate necessary action besides charge sheeting the delinquent officials up to the Assistant Commissioner for their complicity, collusion and notorious connivance. The Director of Municipal Administration is directed to issue necessary

262



instructions to the Trichy Corporation to enforce the directions of the Forum and send an action taken report within (30) days .

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. த. விக்னேஸ்வரன்,
   71, 5வது தெரு,
   அருணாச்சல நகர், கிராப்பட்டி,
   திருச்சிராப்பள்ளி – 620 012.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   பாரதிதாசன் சாலை,
   கண்டோன்மெண்ட்,
   திருச்சிராப்பள்ளி -620 001.
3. உதவி ஆணையர், (ஆணையர் வழியாக)
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
   வார்டு குழு அலுவலகம் - 2,
   அரியமங்கலம் மண்டலம்
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.